# கடவுள் வேறு; மதம் வேறு

கடவுளையும் மதத்தையும் பிரித்து அறியும் அறிவு உலகில் பெரும்பாலான மக்களிடத்தில் இல்லை. இதனால் ஏற்படுவதே மதச் சண்டைகள்.

உலகில் அரசியல் போர்களினால் இறந்தவர்களை விட மதச் சண்டைகளால் இறந்தவர்களே அதிகம் என்று கூறப்படுகிறது.

கடவுள் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானவர். மதம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கூட்டத்திற்குச் சொந்தமானது. இதனால் ஒவ்வொரு கூட்டமும் ஒவ்வொரு மதத்தைப் பின்பற்றி வருகிறது.

மதங்களின் பிள்ளைகள் வேறு; கடவுளின் பிள்ளைகள் வேறு.

கடவுளின் பிள்ளைகள், கடவுளின் பிள்ளைகளான உலக மக்கள் அனைவருடைய நன்மைகளையும் நாடுவார்கள்.

மதங்களின் பிள்ளைகள் அந்தந்த மதங்களைச் சேர்ந்தவர்களின் நன்மைகளை நாடுவார்கள்.

மதத்தலைவர்கள் தங்கள் மதத்தைச் சேர்ந்தவர்கள் அடுத்த மதத்திற்குச் சென்று விடாமல் பாதுகாப்பார்கள். அடுத்த மதத்திலுள்ளவர்களை தங்கள் மதத்திற்குக் கொண்டு வருவதற்கு முயற்சி எடுப்பார்கள். இதனால் பிணக்கு ஏற்படும். பிணக்கு, சண்டையாக மாறி, சண்டை கலவரமாக மாறும். மக்கள் கொல்லப்படுவார்கள்.

மதம் அரசியலோடு தொடர்புடையது. அரசியல் வாதிகள், மதத்தலைவர் வேடத்தில் மதத்தில் புகுந்து அரசியல் செய்வதை நாம் மதங்களின் வரலாற்றில் காணலாம்.

அரசியல் உடலோடு தொடர்புடையது. கடவுள் ஆன்மாவோடு தொடர்புடையவர். ஆன்மாவின் நன்மைக்காக கடவுளை அறிவதும் உணர்வதும் வேறு. உடல் நன்மைக்காக மதங்களை நாடுவது வேறு. பெரும்பாலான மத மாற்றங்கள் உடல் நன்மையோடு தொடர்புடையவை.

உலகில் பிறந்த வரலாற்று மனிதர்களில், கடவுளின் மகனாகவும், கடவுளாகவும் நம்பப்படுகின்றவர் இயேசு கிறிஸ்து. கடவுள் என நம்பப்படுகின்ற இயேசு கிறிஸ்துவின் பெயரால் கிறிஸ்தவ மதம் உலகமெங்கும் பரவியுள்ளது. இதனால் மதமாற்றத்தைப் பற்றி இயேசு கிறிஸ்து கூறுவதைப் பார்ப்போம்.

> *“வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஐயோ, உங்களுக்குக் கேடு! ஒருவரையாவது உங்கள் சமயத்தில் சேர்ப்பதற்கு, நாடு என்றும் கடல் என்றும் பாராது சுற்றி அலைகின்றீர்கள். அவ்வாறு சேர்த்தபின் அவரை உங்களைவிட இரு மடங்கு நரகத் தண்டனைக்கு ஆளாக்குகிறீர்கள்”*

(மத்தேயு 23:15).

என்று மதமாற்றம் செய்பவர்களை இயேசு கிறிஸ்து கண்டிக்கின்றார்.

மதமாற்றம் மத அரசியலுக்குப் பயன்படுமே அல்லாமல், கடவுளுக்குச் செய்யும் கடமை ஆகாது என்பது இயேசு கிறிஸ்துவின் கருத்து.

கடவுளுக்குச் செய்யும் கடமையைப் பற்றியும் இயேசு கிறிஸ்து தெளிவாகக் கூறுகின்றார். எவ்வாறு?

> *“மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்துக் கடவுளின் தூதரிடையே மகிழ்ச்சி உண்டாகும் என உங்களுக்குச் சொல்கிறேன்”*

(லூக்கா 15:10)

என்று மதமாற்றத்தைக் கண்டித்து மனமாற்றத்தை ஆதரிக்கின்றார்.

இயேசு கிறிஸ்து கூறும் "பாவி" என்பது பொதுவாக பாவத்தையுடைய மனிதர்களைக் குறிப்பதாயினும் சிறப்பாக அநியாய வழியில் பொருள் சேர்ப்பவர்களையும், ஏழைகளை கசக்கிப் பிழிந்து பயனடையும் ஆதிக்க வாதிகளையும் குறிக்கும் என்பது அவர் தரும் விளக்கம் ஆகும். இயேசு கிறிஸ்து, மதத்தையும், மதத் தலைவர்களையும், மதத்தலைவர்களின் தவறான விளக்கங்களையுடைய மதக் கொள்கைகளையும் கண்டித்தார். இதனால் மதவாதிகள் அவரைச் சித்திரவதை செய்து சாகடிக்க சிலுவை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தார்கள். அவர், மரணமடைந்தார். பின்பு "உயிர்த் தெழுந்தார்" என்பதும், "பரிசுத்த ஆவியினால் வழிநடத்துகின்றார்" என்பதும் கிறிஸ்தவர்களின் நம்பிக்கை.

அவர் காலத்திற்குப் பின்னர், மதவாதிகள் அவர் பெயரால் மதத்தை உருவாக்கி அவர் போதித்த கொள்கைகளை தங்களுடைய தவறான விளக்கங்களால் அதே சிலுவையில் சாகடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அவர் கூறியுள்ள கொள்கைகளின் சாரம் "விண்ணரசு" என்பதில் அடங்குகிறது.

இதைச் சற்று விரித்துக் கூறினால் "ஆன்மீகப் பொதுவுடைமை" என்பதை அது விளக்கும்.

கிறிஸ்தவ மதம் உருவாவதற்கு முன்னர், இயேசு கிறிஸ்து காட்டிய வழியில் இணைந்த மக்கள் முதலில் தனியுடைமையை நீக்கி பொதுவுடைமையை உருவாக்கியதை திருத்தூதர் பணி இரண்டாம் அதிகாரத்தில் பார்க்கின்றோம். இயேசு கிறிஸ்து காட்டிய ஆன்மீகப் பொதுவுடைமை கிறிஸ்தவ மதத்தால் தோற்கடிக்கப்பட்டது.

இயேசு கிறிஸ்து காட்டிய ஆன்மீகப் பொதுவுடைமைக் கொள்கையைக் கிறிஸ்தவ மதம் தோற்கடித்ததால், காரல்மார்க்ஸ், அரசியல் பொதுவுடைமையை வகுத்துக் கொடுத்தார்.

ஆன்மீகப் பொதுவுடைமை மனமாற்றத்தால் வருவது. அரசியல் பொதுவுடைமை அரசியல் வன்முறையால் வருவது. ஆன்மீகப் பொதுவுடைமை விண்ணரசு சார்ந்தது; அரசியல் பொதுவுடைமை மண்ணரசு சார்ந்தது. மண்ணில் விண்ணரசை நிறுவ முயலுவது ஆன்மீகப் பொதுவுடைமை. மண்ணில் விண்ணரசு வரவிடாமல் தடுப்பது கிறிஸ்தவ மதம். கிறிஸ்தவர்களின் நம்பிக்கையின்படி, மண்ணில் விண்ணரசு வரப்பாடுபட்டவர், மனிதனாக வந்த கடவுள். கடவுளின் விண்ணரசு மண்ணில் உருவாகிவிடாமல் தடுப்பது கிறிஸ்தவ மதம்.

ஆகவே கடவுள் மனிதனாக வந்து கற்றுக் கொடுத்தார் என்று நம்பும் கிறிஸ்தவத்தில் கடவுள் வேறு; மதம் வேறு என்பது தெளிவு. இவ்வாறே உலகிலுள்ள கடவுள் வழிபாட்டுச் சமயங்கள் ஒவ்வொன்றையும் நாம் ஆராய்ந்தால் கடவுள் வேறு மதங்கள் வேறு என்பது தெளிவாக விளங்கும்.

இதனால் மதங்களைப் பின்பற்றுபவர்கள் கடவுளைப் பின்பற்றுபவர்கள் ஆக மாட்டார்கள். கடவுளைப் பின்பற்றுதல் என்பது, தமிழ் இலக்கணம் கூறுகின்றபடி கடவுளை அனுபவித்தலோடு தொடர்புடையது. இதை விளக்குவது தமிழ் மொழியிலுள்ள அகப்பொருள் இலக்கணம் ஆகும்.

தமிழ் மொழியிலுள்ள அகப்பொருள் இலக்கணம் உலகிலுள்ள வேறு எந்த மொழியிலும் இல்லை. காரணம் தமிழ் மொழி ஒரு தெய்வீக மொழி. கடவுளை அறிவியல் வழியில் விளக்கிக் கூறுவதும் தமிழ் மொழி ஒன்றே ஆகும்.

ஆகவே, **தமிழ் மொழியிலுள்ள அகப்பொருள் இலக்கணத்தை அறிவோம்.**
**கடவுள் வேறு; மதம் வேறு என்பதை உணர்வோம்.**

– ஆசிரியர்